Naller Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் ௧8 ஆவணி 23 முஹர 3 இதழ் 210
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8-9-1986

## பயங்கரவாத எதிர்ப்பு:
### இலங்கை முயற்சிக்கு
## அணிசேரா மாநாட்டில் ஆதரவு இல்லை!

ஹராரே, செப் 7

எட்டாவது அணிசேரா உச்சிமாநாட்டில் பயங்கரவாதத்துக்கெதிரான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு மாநாட்டில் எதிர்பார்த்தளவு ஆதரவு கிடைக்கவில்லையென ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்று முடிவடைந்த இம் மாநாட்டின் இறுதி அறிக்கையில் பயங்கரவாதத்துக் கெதிரானஷரத்துக்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டே ராஜதந்திர வட்டாரங்கள் இக் கருத்தை வெளியிட்டுள்ளன.

இம் மாநாட்டில் உரையாற்றிய இலங்கை பிரதமர் பிரேமதாஸா பயங்கரவாதத்துக்கு எதிராக அனைத்து நாசுளும் ஒன்றுபட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அத்துடன் இன்று இலங்கை இதனால் பாதிக்கப்பட்டிருந்தாலும், நாளை அனைவரும் பாதிக்

(-4ம் பக்கம் பார்க்க)

### ● நேற்று அதிகாலைமுதல்—

# யாழ். நகரில் 100க்கு மேல் 'ஷெல்'கள் பிரயோகம்

### காவல் அரண் சேதம்

யாழ்ப்பாணம், திங்கள்

முல்லைதீவு இராணுவ முகாமின் பாதுகாப்புக்காக பஸ்டிப்போவில் அமைக்கப்

4ம் பக்கம் பார்க்க)

## இருவர்பலி; பலர் காயம் கட்டிடங்கள் சேதம்!

(ஐ. சண்முகலிங்கம்)

**யாழ் நகரில் நேற்று என்றுமில்லாதவாறு கோட்டை இராணுவ முகாமிலிருந்து சுமார் நூறுக்கும் மேற்பட்ட ஷெல்கள் பிரயோகிக்கப்பட்டன. இதில் இருவர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நேற்று அதிகாலை முதல் இந்த ஷெல் பிரயோகம் ஆரம்பமானது. நகரின் பல்வேறு கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன.**

நேற்று அதிகாலை 4மணியளவில் யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் யாழ் பொது நூலகத்தினுள் வந்து நின்றதை அவதானித்த போராளிகள் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் நூல் நிலையத்தை விட்டு கோடடைக்குத் திரும்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதலை அவர் மேற்கொண்டனர்.

யாழ் கஸ்தூரியார் வீதி வழியே வந்துகொண்டிருந்த செல்லையா (60 வயது) என்ற வயோதிபர் ஷெல்பட்டு ஸ்தலத்திலேயே பலியானார்.

கொட்டடியில் விழ்ந்த இரு ஷெல்களால் ஒரு வீட்டின் சமையலறை சேதமடைந்ததுடன் கொட்டடிப் பகுதியில் உள்ள ரெலிபோன் கம்பிகள், மின்சார வயர்கள் யாவும் அறுந்துள்ளன.

யாழ்ப்பாணம் சந்தையிலுள்ள வெற்றிலைக் கடைக்கும், வைரவர் கோவிலுக்கு முன்பாகவும் வீழ்ந்த இரு

(4ம் பக்கம் பார்க்க)

### காயமடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றைய 'ஷெல்'த்தாக்குதல்களால் காயமடைந்தோர் விபரம் பின்வருமாறு:

திரு அடைக்கலம் மோகனதாஸ் [வயது 32] ஆனைக்கோட்டை, திரு பாலசுப்பிரமணியம் [வயது 22], பவா

(4ம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்குள் இரு இராணுவத்தினர் பலி!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் கோட்டை இராணுவமுகாம் மீது போராளிகள் நேற்று நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கோட்டை முகாம் 'ஷெல்' பிரயோகத்துக்குப் பதிலடியாக அனைத்துப் போராளிக்குழுக்களும் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கோட்டைக்குள் 'ராக்கெட்' தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பருத்தித்துறையில் 'ஷெல்' தாக்குதலில் 8 பேர் காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் தொடக்கம் மோட்டார் ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

இத்தாக்குதலினால் பொது மக்கள் 8பேர் படுகாயமுற்றனர்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலைத்தொடர்ந்து நமது இயக்கப் போராளிகளால் 6 அங்குல மோட்டர் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இராணுவதரப்பில் ஏற்பட்டுள்ள சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை என்றும் தமிழீழவிடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## "இந்தியாவிடம் இலங்கையின் புதிய மாற்றுத் திட்டம்"
### —ப. சிதம்பரம்

சென்னை

"இலங்கை இனப்பிரச்னை தீர்வுசம்மந்தமாக இலங்கை அரசின் புதிய யோசனைகள் அடங்கிய மாற்றுத்திட்டம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது" என்று மத்திய உள்நாட்டு பாதுகாப்புதுறை இணை அமைச்சர் திரு. ப சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை அமைச்சர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: இலங்கையரசிடம் கிடைக்கப்பெற்ற யோசனைகள் மீதான ஆலோசனைகள் புதுடில்லியில் இன்னும் இரண்டு நாட்கள் கழித்து நடைபெறும் எனத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இலங்கை இனப்பிரசனைக்குத் தீர்வு காண்ப

(4-ம் பக்கம் பார்க்க

### 'ஷெல்' அமர்க்களம்:
## அபாய அறிவிப்பு; மண்மூடை அரண்களுக்குள் மக்கள் தஞ்சம்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஷெல் ஏவப்பட்டதும் பொது மககளுக்கு அது குறித்து எச்சரிக்கும் அபாய அறிவிப்புச் சங்கு நேற்று யாழ்நகரில் அடிக்கடி ஒலித்தவண்ணமிருந்தது.

இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதும் யாழ், நகரில் நடமாடிய பொதுமக்கள் நகரின் மத்தியிலுள்ள இரு மக்கள் பாதுகாப்பு அரண்களுக்குள் ஓடிச்சென்று பதுங்கித் தமமைக் காப்பாற்றிக் கொள்வதனை நேற்றுக் காணமுடிந்தது.

யாழ் ஆஸ்பத்திரிமுன்பாக

(4ம் பக்கம் பார்க்க)

### கொச்சிக்கடையில்———
## கூட்டுக்கட்சிக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு: 3 பேர்காயம்

கொழும்பு, திங்கள்

கொச்சிக்கடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முக்கூட்டு பொதுக்கூட்டத்தில் குண்டுகள் வெடித்து மூன்று பேர் காயமுற்றனர்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, மக்கள் சுதந்திரக்கட்சி ஆகிய மூன்று கடசிகளின் ஆதரவில் இக்கூட்டம் நடைபெற்றது. மூன்று கட்சிகளின் தலைவர்களும் மேடையில் காணப்பட்டனர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு விஜயகுமரணதுங்க, திரு. அத்தகொட செனிவிரட்ண ஆகியோரே அத்தலைவர்களாவர்.

திரு. எச். ஜி. ரத்னவீர கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது பொதுமக்கள் மத்தியில் இரண்டு குண்டுகள் வெடித்தன. மூன்றுபேர் காயமுற்றனர் ஒருவருக்கு கடுமையான காயம் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

குண்டு வெடிப்பையடுத்து சிறிதுநேரம் கூட்டம் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் நடைபெற்றது. [ஆ]

## ஷெல் அடியில் 'ரெஸோ' அம்புலன்ஸ் சேதம்!

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழீழ மாணவர் பேரவை [ரெஸோ] யின் சேவையிலீடுபட்டுவரும் 'அம்புலன்ஸ்'வாகனத்தின் மீது 'ஷெல்' தாக்கியதால் வாகனத்தின் பின்பக்க ரயர் வெடித்துச் சேதமானது.

நேற்றிரவு 8-15 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சேவையிலீடுபட்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவநேரம் அம்புலன்ஸ் வாகனத்துக்குள்ளிருந்தசாரதியும்சேவையாளரும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

## கமத்தொழில் விரிவாக்க நிலையங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இரு கமத்தொழில் விரிவாக்க நிலையங்கள் இனந்தெரியாத நபர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. (மா)

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ், ஆரம்பம்: 13-09-86 சனி 3-30 p.m. வகுப்பு நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 p.m- 3-30 p.m and 3-30 p.m. - 4 30 p.m [C-4404]

Spoken English, பகல்நேர புதிய வகுப்பு. திங்கள், புதன், வெள்ளி நாட்களில். காலை 9-10 மணிவரை. ஆரம்பம்: 10 09-86. S. P.Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [C 4402]

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கான துரிதமீட்டல் வகுப்புக்கள் க. பொ. த. [உயர்தர] வகுப்புக்கான ஆங்கிலம். காரைநகர் வலந்தலை செல்வா நிலையத்தில் மாலை 3-00மணிக்கு நடைபெறுகின்றன. தொழிலாளர் ஆசிரியர் தொழில் நுட்பத்தினர் அனைவருக்குமான வகுப்புகள் சித்தன்கேணிச்சந்தி மாதர்சங்கக் கட்டிடத்தில் சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கு போதனை நடைபெறும். ஆசிரிய கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கற்பிக்கின்றார். [C-4488]

## தேவை

காசாளர் (Cashier) தேவை. ஆண் / பெண் இருபாலாரும் 10-9-86 முன் விண்ணப்பிக்கவும். மெடிக்கல் ஹோல், No. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 4470)

பிரதான வீதியில் அல்லது அருகாமையில் கடையும் ஒரு வீடும் வாடகைக்கு அல்லது குத்தகைக்குதேவை. யோசப், 13 25), மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். (C4472)

ஆங்கிலம், தமிழ் அச்சுக் கோர்ப்பவர்கள் தேவை. குறைந்தகால அனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் ஏற்கப்படும் நடைமுறை ஊதியம், சகாயநிதி செலுத்தப்படும். இல 6 குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-4480)

அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில் நித்திய பூசை செய்வதற்கு அனுபவமுள்ள பிராமண அர்ச்சகர் தேவை. நல்ல சம்பளமும், இருப்பிடவசதியும், படித்தனமும் வழங்கப்படும். விண்ணப்பங்களை 20-09-86க்கு முன்னர் S. S. Iyer, General Administration Office, S L S C. Hingurana என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (C-4485)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த கப்பலில் வேலைசெய்து விடுமுறையில் தாயகம் திரும்பியுள்ள 29வயதுடைய 2ல் செவ்வாயுள்ள உத்திராட நட்சத்திரமுடைய வாலிபருக்கு மணப்பெண்தேவை வி. சமலநாதன். 31/1, சங்கிலியன்வீதி, நல்லூர். [C-4481]

## விற்பனைக்கு

சேவற்குஞ்சுகளுக்கு பதிவு செய்தவர்கள் 9ம் திகதி, 10ம் திகதி, 16ம் திகதிகளில் தவறாது பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் (C 4471)

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது. சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

### புதிய விஞ்ஞான மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் தொடக்கம்

இவ்வருட யாழ் பல்கலைக்கழக புதிய விஞ்ஞான மாணவர்களுக்கான ஆரம்ப கணனி (Introductory Computer Programming) வகுப்புக்கள் வரும் புரட்டாதி மாதம் 10ம் திகதி பிற்பகல் 2-00 மணிக்குகணித / புள்ளிவிபரவியல் துறைப் பகுதியில் நடைபெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதிவாளர்.

(A 1238) 02-09-86

### 4-வது பிறந்த நாள் வாழ்த்து
### செல்வி ஜெயதர்ஷனி

சரவணை கிழக்கைச் சேர்ந்த கனகரெத்தினம் வேதாந்த செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெயதர்ஷனி (ராதிகா) இன்று 8-9 86 தனது 4-வது பிறந்ததினத்தை கொண்டாடுகிறார். இவரை அம்மம்மா ஐயா அப்பா, அம்மா, இந்திய பெரியமாமா, ஜேர்மன் சின்னமாமா, அச்சாமாமா அன்ரிமார், சித்தப்பா, பாட்டி, சுதன் அண்ணா, கரன் அண்ணா, வாணி அக்கா, அமுதாக்கா, உறவினர்களும், டல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

C 4491

### நகுலேஸ்வர பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், திங்கள் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இம்மாதம் 10ம் திகதி புதன் கிழமை இவ்வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் த. இராமசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா.சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும், காங்கேசன்துறை வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரமும், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சேமசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள். திருமதி தே. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். இப்பரிசளிப்பு விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழும்.

### VACANCY
### for Circular Knitting Machine Operator

KNITTING மெசினில் இயக்குநராக வேலைசெய்யக் கூடிய இரண்டு அல்லது மூன்றுவருட அனுபவமுள்ள OPERATOR உடனடியாகத் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

**நிற்வெயர் லிமிட்டட்,**
(V. C. முன்பாக)
2, அதிகார் ஒழுங்கை, கோப்பாய்.

[C-4437]

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE, VADDUKODDAI.

### COMPUTER PROGRAMMING
### Basic Language

Duration: 3 months [150 hours]
Commencing on 15-09-1986.
Monday - Friday (9-00 — 12-00a.m.)only

Qualification: Students of either sex, below 24 years old, Passed G. C. E. (O/L) with credit passes in Maths, English, and Science can apply.

Course fee: Rs 1,500/- pay on registration.

Call at office with Birth, Educational and character certificates during working hours before 12-09-86 for interview and selection.

DIRECTOR.

[A-1242]

உ
சிவமயம்

### திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய ஆண்டு ஆவணி மாதம் 25-ம் நாள் (10-09-86) புதன்கிழமை காலை 9-00 மணிமுதல் 10 00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| திருவளர் செல்வன் **இரகுநாதன்** (சிறுப்பர், மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம், கொழும்பு) அவர்கட்கும் | திருவளர் செல்வி **இராசலட்சுமி** அவர்கட்கும் |

திருவருள் துணைகொண்டு வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருமாங்கல்ய தாரண வைபவத்தில் உறவினர், நண்பர்கள் அனைவரும் தவறாது சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| மிருதங்கவித்துவான் அம்பலவாணர் குடும்பம், | திருமதி பவளரத்தினம் சுப்பிரமணியம் |
| மக்கள், மருமக்கள். 2, சேர்.பொன் இராமநாதன்வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். | திரு. சு. திருநாவுக்கரசு (ஆசிரியர்) சிவன் கோவிலடி, சித்தன்கேணி. |

(C 4482)

### மேல்நாட்டு பயணம்

**பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா**

மற்றும் எந்த நாடுகளுக்கும்

மிகக்குறைந்த விமானக் கட்டணத்துடன்
சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

எங்கள் சில குறைந்த ஒருவழிக் கட்டணங்கள்:

| | | |
|---|---|---|
| குவைத் | — | ரூ 7,150/- |
| துபாய் | — | ரூ 6 150/- |
| லண்டன் | — | ரூ 9,300/- |
| ஒஸ்லோ | — | ரூ. 11,500/- |

இருவழிக் கட்டணங்கள்:

சிங்கப்பூர் — ரூ. 7,800/-

கொழும்பு/சிங்கப்பூர்/பாங்கொக்/கொழும்பு ரூ. 10500/-

நியாத் அல்லது லக்ஷ்மியுடன் தொடர்பு கொள்ளவும்

**FREIGHT and TRAVELS LANKA Ltd.**
307, GALLE ROAD, COLOMBO-3.
T' Phone: 573609 (A 1224)

### பிரயாண ஒழுங்குகள்

இதோ

நாம் வழங்கும் பயணச் சேவைகள்

★ டென்மார்க் ★ பிரான்ஸ்
★ ஜேர்மனி ★ சுவிற்சலாந்து
★ கனடா ★ அவுஸ்திரேலியா
★ லண்டன்

முதலிய நாடுகளுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

குவைத் சுப்பர்மார்க்கட் பணியாளர்கள்
ஆண்கள், பணிப்பெண்கள் வெற்றிடம்
**சிங்கப்பூர் — குவைத்**
10 படம், 1 கலர் படம், பாஸ்போட் என்பவற்றுடன் நேரில் வரவும்.

எமது ஏனைய சேவைகள்

**பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற்**
என்பவற்றை தாமதமின்றி பெற்றுத் தருகின்றோம்.

## ரஜீவன் ரவல்ஸ்

(B. M. C. முன்பாக)
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

(A 1316)

## மணிவாக்கு

நீ வாழ்வை நேசிக்கிறாயா, அப்படியானால் நேரத்தை வீணாக்காதே, ஏனெனில் வாழ்வை உருவாக்கிக் கொடுக்கும் பொருள் நேரம்தான். - பெஞ்சமின் பிராங்க்ளின்

## நமதுநோக்கு

# விமானப் பயணங்களை எதிர்நோக்கும் ஆபத்துகள்

பம்பாயிலிருந்து புறப்பட்ட ''பான் அமெரிக்கன் ஜம்போ ஜெட்'' விமானம் ஆயுதம் ஏந்திய நான்கு நபர்களால் கராச்சி விமான நிலையத்தில் பிரயாணிகளுடன் பணயம் வைக்கப்பட்ட சம்பவம் நாகரிக உலகம் வெட்கித்தலைகுனிய வேண்டிய ஒன்று.

சைப்பிரஸ் நாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ள தங்கள் சகாக்களை விடுவிப்பதற்காக இந்த விமானத்தைக் கடத்தியதாகக் கூறப்படும் நபர்கள் உலக நாடுகள் பலவற்றைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட பிரயாணிகளை பணயமாக வைத்திருந்தார்கள்.

முதலில்வந்த செய்திகளின்படி விமானத்தில் 416 பிரயாணிகள் இருந்ததாகவும், இவர்களில் 193 இந்தியர், 84 பாகிஸ்தானியர், 44 அமெரிக்கர், 15 பிரித்தானியர், 16 இத்தாலியர், 12 மேற்கு ஜெர்மனியர் இருந்ததாகவும் தெரிகின்றது. ஏனையோர் இலங்கை, கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாம். பிரயாணிகளில் ஒருவர் ஏற்கனவே கடத்தல்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். விமான ஊழியர்கள் மூவர் முன்கூட்டியே இரகசியமாகத் தப்பிவிட்டனர்.

விமானத்தை சைப்பிரஸிற்கு பிரயாணிகளுடன் கொண்டு செல்லவேண்டுமென கடத்தல்காரர்கள் கோரிக்கைவிடுத்து அதன் மீது விமானநிலைய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தவேளையில் பாகிஸ்தான்ராணுவத்தின் அதிரடிப் படையினர் விமானத்துக்குள் புகுந்துள்ளனர் இதனால் ஏற்பட்ட இருதரப்பு துப்பாக்கிப்பிரயோகத்தில் 18 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. அதேசமயம் கடத்தல்காரர்கள் நால்வரும் பிடிபட்டுள்ளனராம்.

விமானக்கடத்தல் சம்பவத்தை சோவியத்யூனியன் கடுமையாகக்கண்டித்துள்ள அதேசமயம் அமெரிக்க அரசாங்கம் கடத்தலை முறியடிக்க பாகிஸ்தான் அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பாராட்டியுள்ளனர்.

விமானப் பயணங்கள் இன்று மிகச் சாதாரணமாகக் கருதப்படுகின்றன. மக்கள் தம் சொந்தக் காரணங்களுக்காக மாத்திரமின்றிப் பலவேறு பொது விடயங்களுக்காகவும் வெவ்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கிறார்கள்.

இப்படியான சமயங்களில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் திடீரென விமானங்களைக் கடத்திப் பிரயாணிகளைப் பணயம் வைக்கிறார்கள். தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈவிரக்கமின்றி ஒன்றுமறியாத- சம்பந்தமே இல்லாத நபர்களை சுட்டுத் தள்ளுகிறார்கள்.

தென்னிலங்கை 'வீரர்' ஏக்கநாயக்க போன்றவர்கள் திடீர்ப் பணக்காரர் ஆவதற்காகவும் இவ்வித விமானக் கடத்தல்களைச் செய்கிறார்கள்.

கராச்சி விமான நிலையச் சம்பவத்தில் பாகிஸ்தான் கொமாண்டோக்கள் நடந்து கொண்ட விதம் சரியானதுதானா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

கடத்தல்காரர்களை மடக்குவதுதான் அவர்களின் நோக்கமாய் இருந்தபோதிலும் பிரயாணிகளில் 18 பேர் பலியாகும் விதத்தில் செயல்பட்டிருப்பதற்கு அவர்களின் அவசரப் போக்கே காரணமெனக் கூறப்படுகின்றது.

கடத்தல்காரர்களிடமிருந்து பிரயாணிகளைக் காப்பாற்றுவதுதான் நோக்கமென்றால் இன்னும் சற்று பொறுமையாகவும் நிதானமாகவும் அவர்கள் நடந்துகொண்டிருக்கலாம். அதனால் பிரயாணிகளில் இன்னும் பலரின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், கடத்தல்காரர்கள் முதலில் சுட ஆரம்பித்ததின் பின்னரே பாகிஸ்தான் படைகள் நடவடிக்கையில் இறங்கியதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதுவானாலும் அப்பாவிகளான 18 பேரின் உயிர்கள் எவ்விதநியாயமுமின்றி பறிக்கப்பட்டுள்ளதை யார் மறுப்பார்.

இன்றைய அவசர உலகத்தில் உலகத்தலைநகர்களுக்கு மக்கள் அடிக்கடி பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் விமானப் பயணங்களுக்கு சகல நாடுகளும் விசேஷமுக்கியத்துவம் கொடுப்பதும், பிரயாணிகளின் உயிர் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் விதத்தில் நிலைமைகளை சீர்படுத்திக் கொள்வதும் அவசியம்.

# மாசேதுங் சிந்தனை உலகப்புரட்சிக்கு தொடர்ந்து ஒளியூட்டும்

**1976-ம்** ஆண்டு செப்டம்பர் மாதம் மாசேதுங் மறைந்தார். இப்பொழுது பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன.

இந்தப் பத்து ஆண்டுகளில் உலகப் பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சிகள் மாசேதுங் முன்வைத்த தத்துவமும் கொள்கைகளும் சரியானவை என்பதை நிரூபித்துள்ளன. புரட்சிதான் உலகின் பிரதான ஓட்டம் என்று அவர் கூறியதை நிகழ்ச்சிகள் சரியென்று காட்டுகின்றன.

மாசேதுங் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் உன்னத தலைவர்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் வழிவந்த மாபெரும் உலகத் தலைவர். உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற இலட்சியத்தின் வெற்றிக்காக மாசேதுங் தனது தத்துவத்தாலும் நடைமுறையாலும் வழிகாட்டினார்.

மாசேதுங் இறந்துவிட்டபோதிலும் இன்று மாநிலமெங்கும் அவருடைய சிந்தனைகள் செயற்படுத்தப்படுகின்றன. பாட்டாளி வர்க்கம், கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் படை, புரட்சிகர ஐக்கிய முன்னணி, மக்கள் யுத்தம், தளப்பிரதேசங்கள் முதலியன பற்றிய மாசேதுங்கின் சிந்தனைகளை பல்வேறு நாட்டுப் புரட்சிகர மக்கள் கற்று அமுலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாசேதுங் தலைமைதாங்கி வெற்றிகரமாக நடத்திய சீனப் புரட்சியின் முக்கியத்துவம், உலகில் முதன்முதலாக நடைபெற்ற வெற்றிகரமான பாட்டாளிவர்க்கப் புரட்சியான ருஷ்யப் புரட்சிக்கு மட்டும் அடுத்ததாக உள்ளது. ருஷ்யப் புரட்சியின் செல்வாக்கில் தோன்றி வளர்ந்து வெற்றிகண்ட சீனப்புரட்சி ருஷ்யப் புரட்சியுடன் பல பொதுவான அம்சங்களைக் கொண்டிருந்தபோதும் தனக்கென சில பிரத்தியேக அம்சங்களையும் கொண்டிருந்தது.

விவசாயிகள் மிகப் பெரும்பான்மையாக வாழும் பின்தங்கிய அரைக் காலனித்துவ அரைப் பிரபுத்துவ சீனாவில் பாட்டாளிகள் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியொன்றைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தலைமையில நடத்தி ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் ஆட்சியை சீனாவில் தூக்கியெறிந்தமை மாபெரும் மாக்சியவாதியான மாசேதுங்கின் தலைமையில்தான் நடைபெற்றது.

''ருஷ்யப் புரட்சியின் வெற்றி வெடிகுண்டுகள் மாக்சிஸத்தை சீனாவுக்குக் கொண்டு வந்தன'' மாசேதுங் இவ்வாறு எழுதினார். மாக்சிஸத்தின் வருகை சீன மக்களின் வரலாற்று ரீதியான முன்னேற்றத்தில் பெரியதோர் திருப்பமாக அமைந்தது.

மாசேதுங் மாக்சிஸத்தை சீன நாட்டின் யதார்த்த சூழ்நிலைக்கேற்ப பிரயோகித்தார் இதனைக் கருத்திற்கொண்டே மாசேதுங்கை மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் வாரிசு எனப் போற்றுகிறார்கள்

மாக்ஸ் என்ற ஜெர்மானிய அறிஞர் முன்வைத்த அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரக் கருத்துக்களை— இந்த உலகக் கண்ணோட்டத்தை—மாக்சிஸம் என்று அழைத்தார்கள். லெனின் என்ற ருஷ்யப் புரட்சிவாதி இந்த மாக்சிஸத் தத்துவத்தைத் தனது நாட்டில் நடைமுறைப்படுத்தி ஒரு கனவை நனவாக்கியபோது மாக்சிஸம்-லெனினிசம் தோன்றியது. மாசேதுங் என்ற ஆசிய நாட்டுப் பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதி மாக்சிஸம்-லெனினிசத்தை ஆயுதமாகக் கொண்டு சீன மக்களுக்கு விடுதலையைத் தேடித்தந்த போது மாக்சிஸம்-லெனினிசம்-மாசேதுங் சிந்தனை என்ற தத்துவம் உருவாகியது.

சீனப் புரட்சி ஆரம்பம் முதலே ஆயுதமேந்திய புரட்சியாகும். சீனப் பிற்போக்காளர் சமாதானமுறைப் போராட்டம் என்ற மாயப் பேச்சுக்கு இடம் வைக்கவேயில்லை. மக்கள் படையின் ஸ்தாபகம் மாசேதுங்கின் இன்னொரு மகத்தான பங்களிப்பாகும். மாசேதுங்கண்ட மக்கள் படை: கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மக்கள்படை; உண்மையாகவே உழைப்பாளி மக்களுக்கு சேவைசெய்யும் மக்கள்படை. ''மக்கள்படை ஒன்று இல்லையேல் மக்களுக்கு எதுவுமேயில்லை'' என்று கூறினார் மாசேதுங். ''துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கின்றது'' என்று மாசேதுங் கூறியபோது அரசு பற்றிய முழு மாக்சிஸத் தத்துவத்தையுமே இந்த சிறிய வசனத்தில் சுருக்கிவிட்டார் என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

**வீ சின்னத்தம்பி**

## கன்னிமரித் தாயே

வியலனவர் கேடகற்றி வெற்றியைக் காண
வித்தொன்றை ஊன்றிடவே விழைந்த நாளில்
கமலமலர் சேற்றிடையில் குளித்துதிப் பதுபோல்
கறைபடிந்த மானிடர்மேல் கருணைய லைவீச
அமலியென ஒருமகள்தான் அவருளம பூத்தாள்
இறைவாக்கும் பலித்ததுவே இன்பவிண் ணரசும்
நமதென்ற கொடையீந்த நாயகி தாளை
நான்வாழ்த்தத் தமிழ்மேளன் நாம லர்ந்துவா

★ ★ ★ ★

மன்னுயிரை மீட்டதேவ மைந்தனை யீன்ற
மாதரசே! மல்லிகைப்பூ முகந்தனை நோக்கின்
பொன்னிலவைக் கண்டெழுந்து பொங்குங் கடலாய்
பூரித்து மகிழதம்மா பிள்ளைகள் நெஞ்சம்
இன்னமுதப் பாலுக்குள் ஊடு ருவியாய்
இருப்பதைப்போல் அருங்குணங்கள் உன்னவடி
வுறங்கும்

கன்னிமரித் தாயேயுன் காலடி தங்கிக்
கவலையுறு தெம்மையிரு கைதூக் கியருள்.

**பாஷையூர் மு. சிங்கராயர்**

[இன்று புனிதமரியாளின் ஈராயிரம் வருடப் பூர்த்திவிழா]

# நீர்வை ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்

கலை வளமும், பொருள் வளமும், கல்வி வளமும் ஒருங்கே அமையப் பெற்ற நீர்வையம்பதி தன்னில் பக்தி அலையைப் பரப்புவதற்கென்று அமையப் பெற்ற ஆலயங்களில் வரலாற்றுப் பெருமையும், தொன்மைச் சிறப்பும் அமையப் பெற்றதாக விளங்குவது ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய யாவற்றையும் தன்னுள் அடக்கிய இவ் ஆலயம் கருவறை, நிருத்த மண்டபம், அர்த்த மண்டபம், வசந்த மண்டபம் ஆகியவற்றைத் தன்னுள்ளடக்கியது மட்டுமன்றி, சிறந்த சிற்பக் கலையுடன் கூடிய சித்திரத் தேர் ஒன்றையும், தேர் தங்குவதற்கான தேர்க் கொட்டகையும் அமைக்கப் பெற்று புதுப் பொலிவுடன் திகழ்கின்றது

பனை மரங்களால் சூழப் பெற்ற செம்மண் பிரதேசத்தில் அமைதியான சூழலில் விநாயகப் பெருமான் கோவில் கொண்டிருப்பதால் ''செம்பாட்டுப் பிள்ளையார்'' என்றும் இவ்வாலய விநாயகர் அழைக்கப்படுகின்றார்.

மூன்று காலப் பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதோடு ஆவணி மாசம் வரும் சுக்கில பட்ச சதுர்த்தியிலன்று கொடியேறி பூரணையன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும் திருவிழாவும், நவராத்திரி விழா, கந்தபுராணப் படிப்பு, திருவெம்பாவைப் படிப்பு, கார்த்திகை சோமவாரங்களில் விசேட பூஜை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும் இவ்வாலயத்தில் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தின் அருகே 40 வருடம் பழமை வாய்ந்த குரு பூசை மடம் ஒன்றும் இயங்கி வருகின்றது இங்கு நாயன்மார்களது குருபூஜைகளும், தேவார, திருவாசகப் பாராயணங்களும், சமயப் பிரசங்கங்களும நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இவ்ஆலயத்தின் வரலாறு நல்லூர் அரசர்களின் வரலாற்றோடு தொடர்புடையதாகும்.

நல்லூரை ஆட்சி செய்த பரராசசேகரனின் மைத்துனன் அரசகேசரி என்பான் பிரதம அமைச்சராக இருந்த பொழுது ஒரு நாள் இவனது கனவில் பனைகள் சூழ்ந்த ஓர் இடத்தில் நன்னீர் கொண்ட கூவம் (கிணறு) ஒன்று இருப்பதாக ஓர் காட்சி தென்பட்டதாகவும அதன்படி அரசகேசரி என்பான் அடுத்த நாள் குறிப்பிட்ட இடத்தில் தேடிய பொழுது கனவின் காட்சியைப் போன்ற கூவம் காணப்பட்டதாகவும் அக் கூவத்தை திரு மஞ்சனமாகக் கொண்டு பிள்ளையார் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

பிற் காலத்தில் போர்த்துக்கேயரினால் இவ் விநாயகர் விக்கிரகத்திற்கு சேதம் ஏற்படுமென அஞ்சிய ஊர்மக்கள் விக்கிரகத்தை கிணற்றுக்குள் போட்டு மூடியதாகவும் பின்பு பல வருடங்களின் பின் தோண்டிய பொழுது குறிப்பிட்ட விக்கிரகத்தின் துபிக்கை முறிந்திருந்ததாகவும் இதனால் புதிய விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறுவர்.

அரசகேசரிக்கும் இவ்வாலயத்துக்கும் உள்ள தொடர்பை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மானிப்பாயிலுள்ள சி எஸ், நவரத்தினம் அவர்களால் எழுதப் பெற்ற ''இலங்கையிலுள்ள இந்து சமய வர

[5ம் பக்கம் பார்க்க]

**க. கணேசராசா**

# அரைகுறை நிவாரணங்கள் கூட சீராக இல்லை!

## வெகுஜன அமைப்புகள் மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

''அரசினால் வழங்கப்பட்டு வரும் அரைகுறை நிவாரணங்கள் கூட குறித்த நேரத்தில் சீராக மக்களுக்கு வழங்கப்படாமல் இருப்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. அடிப்படை பொருளாதார வசதியில்லாமல் திணறும் மக்களுக்கு இவ்வகையான அரைகுறை நிவாரணங்கள் உடனுக்குடன் கிடைக்காமல் இருப்பது எமது பிரதேசங்களில் செயலாற்றும் நிர்வாகத்தின் சீர்கெட்ட முறையினால் என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்ருகும்.''

உணவு முத்திரை விநியோகச் சீர்கேடுதொடர்பாக வெகுஜன அமைப்புக்கள் கூட்டாக யாழ். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் கவனத்திற்கு கொண்டுவந்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்புமன்றம், சீவல் தொழிலாளர் நலன்புரி ஒன்றியம், உழைக்கும் மக்கள் ஜனநாயக முன்னணி, கிராமிய உழைப்பாளர் சங்கம், ஈழவர் முன்னணி ஆகிய அமைப்புக்கள் இம்மகஜரில் கையொப்பமிட்டுள்ளன.

அம்மகஜரில் மேலும், ''இன்று அனைத்து ஒடுக்குமுறைகளாலும் தொழில் இல்லாது வருவாய்குன்றி இருக்கும் மக்கள் குறைந்தபட்ச உணவுத் தேவையைக் கூட பூர்த்திசெய்ய முடியாது அல்லல் படுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயங்களில் எழும் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு கண்டு நியாயமான விநியோகம் நடைபெற துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலய உற்சவம் இன்று திவ்வியபாடற் பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும். (வா)

## சுகாதார திணைக்கள தொழிலாளர் வெற்றிடம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

யாழ். சுகாதார திணைக்களத்தில் சாதாரண தொழிலாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தில் தற்போது சமயாசமய சாதாரண தொழிலாளர்களாக கடமையாற்றும் ஊழியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் ஊழியர்கள் எட்டாம் வகுப்பு சித்தியடைந்து இருக்க வேண்டும் என்றும் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: குறைந்த பட்சம் இரண்டு வருட சேவையைப் பூர்த்தி செய்த மருந்தக பராமரிப்பாளர்கள் பல்வைத்திய நிலைய பகுதி நேரதொழிலாளர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தகுதியுடைய ஊழியர்கள் விணணப்பங்களை இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் தங்கள் நிறுவனத்தலைவருக்கு ஊடாக யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வா)

கலர் பிலிம் சுருள்களை PROCESSING & PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

(A 1041)

லிடோ
10-30, 2-30, 6-30
சிவாஜிகணேசன் மஞ்சுளா நடித்த
உத்தமன்
(புதிய பிரதி)

வெலிங்டன்
10-30 2-30, 6-30
தியாகராஜன் சில்க் சுமிதா ஜெய்சங்கர்—பானுசந்தர் நடித்த
நீங்கள் கேட்டவை
(கலர்) புதிய பிரதி

## சீருடைத் துணிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான சீருடைத் துணிகள் லொறி மூலம் ஆஸ்பத்திரிக்கு வந்துசேர்ந்துள்ளன. (ச)

## பாராட்டு

அராலி, ஞாயிறு

பம்பாய் வெங்காயத்திற்கு நல்லவிலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் யாழ்ப்பாணம்கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளருக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

பம்பாய் வெங்காய உற்பத்தியாளருக்குத் தொடர்ந்தும் இவரது ஊக்குவிப்புக் கிடைக்க வேண்டுமென சங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

## சிவானந்த மகரிஷி நூற்றுண்டுதினம்

இன்று 08-09-86 புனிதமான தினமாகும். சிவானந்த மகரிஷியின் அவதாரத் தேதி. இன்றைய தினம் உலகெங்கும் சிவானந்தரின் சீடர்களால் கொண்டாடப்படுகின்றது. மேலும் இன்றையதினம் குருதேவரின் நூற்றுண்டு விழாவாக உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. குருதேவரின் ஞாபகார்த்தமாக நினைவாலயங்கள் கட்டப்பட்டும், புத்தக வெளியீடுகள் நடைபெற்றும்வருகின்றன. யாழ் திவ்ய ஜீவன சங்கம் இன்றைய புனித் தினத்தை பூஜை பஜனை சொற்பொழிவுகள்மூலம் மண்டபத்தில் கொண்டாடுகின்றது.

சிவானந்தசற்குருவை ஜகத்குரு என அழைக்கின்ருர்கள் அவரை புகைப்படத்தில் பார்த்தாலும், மனதில் நினைத்தாலும், அவரின் புகழைப் பாடினாலும் தமக்குக் கிருபை கிட்டும். பகவானே குருவாகவருகிருர். குருவும் பகவானும் வேறல்ல. 'சிவானந்தர்'' எனும் நாமத்தை மனதில் நினைத்தால் கவலைகள் நீங்கும். ஓம் நமோ பகவதே சிவானந்தாய என ஜெபம் செய்தால் சம்சாரத்திலிருந்து விடுதலை கிடைக்கும்.

சிவானந்த ஸ்தோத்திரங்களை தினமும் பாடமனச்சஞ்சலங்கள் நீங்கி, இருதயம் ஆனந்தம், சாந்தி, சுகம் முதலியவைகளால் நிரப்பப்படும். அவரது உருவத்தைத் தியானம் செய்ய அழிவற்ற நிலமை (பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை) ஏற்படும். சர்றமங்களமும் உண்டாகும்.

சி. கனகரத்தினம் — தலைவர்
யாழ். திவ்ய ஜீவன சங்கம்.

### பயங்கரவாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படலாம் எனவும் வலியுறுத்தினர்.

அண்மையில், தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் சார்க்) மாநாட்டிலும் பயங்கரவாதத்திற் கெதிராக தீர்மானம் கொண்டுவர இலங்கைவேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே. [ஊ]

### இந்தியாவிடம்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தில் இந்தியாவின் மத்தியஸ்த்தத்தைஇலங்கை அரசு விரும்பாவிடில் மத்தியஸ்த்தத்தில் இருந்து விலகிக்கொள்ளும் என ஹராரேயில் கூறியிருப்பது சம்மந்தமாக அமைச்சரிடம் கேட்டபோது இதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம் எனக் குறிப்பிட்டார். [வா]

### காயமடைந்தோர்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[வயது 17], திரு. தர்மராசா [வயது 37], கண்ணன் [வயது 16] டேவிட்மாத்தையா [வயது 19] சுன்ஞகம், திரு. ஞானசேகரம் [வயது 37] கொட்டடி, திரு. எஸ். சிவலிங்கம் [வயது 22] கொட்டடி, தவமணி [வயது 20], ரதுல் கான் [வயது 16]. [ச]

### காவல் அரண்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட காவல் அரண்மீது ஆர். பி. ஜி, தாக்குதல் மேற்கொண்டதில் காவல் அரண் முற்ருகச் சேதமடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''நேற்று நண்பகல் 12 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு பாதுகாப்பாக (பஸ்டிப்போவில்) அமைக்கப்பட்ட காவல் அரண் மீது எம்மவர்களால் ஆர். பி. ஜி. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காவல் அரண் முற்ருகச் சேதமடைந்தது. அதைத் தொடர்ந்து இராணுவத்துக்கு உதவுயாக முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து நடைபவனியாகவும் 3 கவச வண்டிகளிலும் படையினர் வந்து கொண்டிருந்த சமயம் முல்லைத்தீவில் வைத்து எம்மவர்கள் ஆர். பி ஜி. தாக்குதல் மேறகொண்டனர்.

இத்தாக்குதல் ஒன்றரை மணி நேரம் நீடித்தது. இராணுவ தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் தெரியவில்லை''. (மா)

# மத்திய கல்லூரி ஆய்வு கூடம் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றைய 'ஷெல்' தாக்குதலில் யாழ். மத்திய கல்லூரியின் ஆய்வுகூடம் பலத்த சேதத்துக்குள்ளானது.

இங்கு சுமார் ஒருலட்சம் பெறுமதியான ஆய்வுகூட சாதனங்கள் சேதமடைந்தன.

இவ்ஆய்வுகூடத்தின் மத்தியில் 'ஷெல்' வந்து வீழ்ந்து வெடித்ததாகக் கூறப்பட்டது.

அத்துடன் இக்கல்லூரியின் கனிஷ்ட பிரிவுக்கட்டிடமும் பலத்த சேதமடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (மா)

## வெற்றி

புதுடில்லி, செப் 7

இந்திய அணிக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்குமிடையே நேற்று இடம் பெற்ற முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்த்திரேலிய அணி 47 ஓவர்களில் 251 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

தொடர்ந்து இந்திய அணி 41 ஓவர்களில் 2o1 ஓட்டங்களைப் பெற்றுவெற்றி பெற்றது.

வீரர் ஸ்ரீகாந்த் 102 ஓட்டங்களைப் பெற்று அபாரமாக ஆடினர். ஜெய்ப்பூரில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் சிறந்த வீரராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 10 ஆயிரம் ரூபா பாசுத் தொகையாக வழங்கப்பட்டது.

### 'ஷெல்'---

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வும், யாழ், நவீன சந்தையிலும் மண் மூடைகளிலான மக்கள் பாதுகாப்பு அரண் ஆ் இருக்கின்றன [புளொட்] த ஈ. மக்கள் விடுதலைக் கழகத்தினல் அமைக்கப்பட்டுள்ள மக்கள் பாதுகாப்பு அரண்கள் இரண்டும் நேற்றைய ஷெல் தாக்குதலின்போது பொது மக்களுக்குப்பலத்த பாதுகாப்பாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [ச]

## மன்னர் சம்பவங்கள்:

# 25 கடைகள் 3 வீடுகள் முற்ருகச் சேதம்!

வவனியா, ஞாயிறு

மன்னரில் இடம்பெற்வ அசம்பாவிதங்களினல் சுமார் இருபத்தைந்துகடைகளும், மூன்று வீடுகளும் முற்ருகசேதமடைந்துளளன, இவைகளினல் ஏற்பட்டுள்ள சேதம் பற்றியமதிப்பீதிகள் நடத்தப் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஒருவார இடைவெளிக்குப்பின்னர் மன்னர் நகர் வழமைக்குத் திரும்பி வருவதாக கூறப்படுகிறது.

மன்னருக்கும், தள்ளாடிக்குமிடையில் தகர்க்கப்பட்ட மதகு திருத்தப்பட்டுள்ளது. வாகனப்போக்குவரத்தும், நகரில் சனநடமாட்டமும் காணப்பட்டபோதிலும் கடைகள் யாவும் மூடப்பட்ட நிலையிலேயயுளளன.

அசம்பாவிதங்களைத் தொடர்ந்து எருக்கலம்பிட்டி, தாராபுரம் ஆகியபகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்ற மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குதிரும்பிக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ரா)

## பிரஜைகள் குழு தீர்மானம்

நெல்லியடி, ஞாயிறு

சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதற்கு ஒருவழி அவ்வித பாவனையாளருக்கு சட்டபூர்வமான மின்வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும் என்று நெல்லியடி பிரஜைகள் குழுக் கூட்டத்தில் கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ வ தங்கராசா முன்வைத்த கருத்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை மின்சார சபையுடனும் நெல்லியடி பட்டினசபையுடனும் இக் கருத்தை முன்வைத்து ஆலோசிகக பிரஜைகள்குழு தீர்மானித்துள்ளது.

### யாழ். நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்களினல் கோவிலும் இரு வெற்றிலைக் கடைகளும் சேதமாகின.

யாழ். பஸ்நிலையத்திலுள்ள முகமதலி அப்துலலி என்ற வர்த்தக ஸ்தாபனத்தின் கூரைமீது ஷெல்வீழ்ந்து சேதப்படுத்தியது. இவ்வர்த்தக நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றும் சேதமடைந்துள்ளது.

யாழ் மத்திய கல்லூரியில் ஷெல் இரண்டு வீழ்ந்துள்ளது ஒரு ஷெல்லுக்கு பாடசாலைக் கட்டிடம் சேதமடைந்துள்ளது. மற்ருெரு ஷெல் கல்லூரியின் பின்புறமாகவுள்ள மதிலில் வீழ்ந்து அருகிலுள்ள வீட்டுக்கூரைகளைச் சேதப்படுத்திவிட்டது இதனல் அப்பகுதியில் உள்ள குடும்பங்கள் சில வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன,

முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள பள்ளிவாசலருகே ஷெல் வீழ்ந்ததினல் ஒரு சிறுமி காயமடைந்தாள் தும்புத் தொழிற்சாலையொன்றும் சேதத்துக்குள்ளானது மணிக்கூட்டு வீதியிலுள்ள கைத்தறிப் புடவை நிலயத்தின் மீதும் ஷெல் வீழ்ந்துள்ளது.

யாழ் பெரியகடை வீதியில் ஷெல் வீழ்ந்ததினல் அப்பகுதியில் உள்ள சில கடைக் கதவுகள் துளையிடப்பட்டுள்ளன. கட்டிடங்களும் துவாரமிடப்பட்டுள்ளன.

கொட்டடிச்சந்தி எவர்விசன், குளோபல் என்பன ஷெல் வீழ்ந்து வெடித்ததினல சேதத்திற்குள்ளாகின.

கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் சந்தை எதுவும் இயங்கவில்லை போக்குவரத்து பஸ்சேவை நடைபெறவில்லை. அயினும் மினிவான்கள் யாழ். வின்சர் சந்தியிலிருந்தும் ஆரியகுளச் சந்தியிலிருந்தும் சேவையாற்றின.

யாழ் கோட்டையைச் சுற்றியுள்ள அண்மித்த பகுதிகளில் போராளிகள் ஆயுதங்களுடன் நின்றிருந்தனர். அதிகாலையிலிருந்து நாள் பூராவும் ஷெல் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

காலை 9-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று யாழ் நகரத்தில் வட்டமிடடவாறு துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தது. ஆயினும் பின்பு அது போய்விட்டது.

தொடர்ந்துமாலையில் இடம் பெற்ற ஷெல் பிரயோகத்தின் போது யாழ் மூன்ரும்குறுக்குத் தெருவைச்சேர்ந்த வயோதிப மாது பலியானர்.

ஐசக் ருக்குமணி [வயது60] என்ற இப்பெண் மலசலகூடத்திலிருக்கும்போது ஷெல் பட்டுப் பலியானர் ஒரு கைம் பெண்ணன இவர் திருமலையிலிருந்து அகதியாக வந்திருந்தார். இவர் 5 பிள்ளைகளின் தாயாவார்.

### வ. பி. போ. ச. ஊழியர்கள்

# சுயவிருப்பத்தின்படி ஒய்வு பெறும்திட்டம்

வசாவிளான், ஞாயிறு

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறும் விசேட ஊக்குவிப்புக் திட்டம் ஒன்றை வடபிராந்திய போக்குவரத்துச் சபை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

மேற்படி ஊக்குவிப்புத் திட்டமானது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அனுசரணையுடனேயே அமுல்படுத்தப்படுகிறது,

இத்திட்டத்தின்கீழ் வழமையான இளைப்பாறல் வசதிகளுடன் விசேட படிகளும் வழங்கப்படும் என வடபிராந்திய போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் இத்திட்டமானது மிகை ஊழியர் பிரச்சினையை ஓரளவு நிவர்த்தி செய்யும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 1ம் திகதியன்று நிரந்தர சேவையிலுள்ள வட பிராந்திய போக்வரத்துச் சபை ஊழியர் எவரும் இத் திட்டத்தின் நன்மையினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15ம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆளணி முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ஸ்ரீ அரசகேசரிப்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

லாறு" என்னும் ஆங்கில நூலின் 72ம் பக்கத்தில் "இரகு வம்சம் செய்த அரசகேசரியால் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது." எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்படி நூலின் பிறிதோரிடத்தில் "மிகப் பழைய காலத்திலிருந்து பிரசித்தி பெற்ற ஆலயங்களின் விபரப் பட்டியலில் 6 வது இடத்தை நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் பெற்றிருக்கிறது.

பல வரலாற்றுச் சிறப்பும் புராதனப் பெருமையும் தெய்வீகத் தன்மையும் வாய்ந்த இவ்வாலய வருடாந்தமகோற்சவம் இம் மாதம் 8ம் திகதியுடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

கல்வித் திணைக்கள ஊழியர் மட்டுப்படுத்தப்பட்ட சேமலாப நிதிச் சங்கத்தின் யாழ் மாவட்டப் பொதுக் கூட்டம் இச் சங்கத்தின் மத்திய நிர்வாக உறுப்பினர்கள் வராத காரணத்தால் நடைபெறவில்லை.

நேற்று. முன்தினம் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இக் கூட்டம் நடைபெறவிருந்தது. [ச]

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலி அரச கேசரி பிள்ளையார் வருடாந்த மகோற்சவம் இன்று 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 17ம் திகதி தேர்த் திருவிழாவும், 18ம் திகதி தீர்த்தோற்சவத்துடனும் திருவிழா நிறைவு பெறும். [இ]

# மோட்டார் சைக்கிள் கடத்தல் முயற்சி தோல்வி

சுண்டுக்குளி ஞாயிறு

இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட விருந்த மோட்டார் சைக்கிள் கடத்தல் முயற்சி பொது மக்களின் உதவியினுல் முறியடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கோப்பாய்க்கும் இருபாலைக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

கோப்பாய் ஊடாகத்தமது மோட்டார் சைககிளில் சிறீஸ்கந்த செல்வன் என்பவர் வீடு திரும்பிய சமயம் இவருக்குப் பின்னுல் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இனந்தெரியாத இருவர் இவரது மோட்டார் சைக்கிளை நிறுத்தும்படி பணித்துவிட்டு அதனைத்தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டனராம் இதற்கு அவர்மறுக்கவே இவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டதாம். இவ்வேளையில் அயலிலுள்ள வீடுகளில் இருந்து பொது மக்கள் அவ்விடத்திற்கு உதவிக்கு வரவே இருவரும் ஒடி மறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

### தாய்க்கும் 2 பிள்ளைகளுக்கும்

# 30,000 ரூபா வழங்க சமாதானசபை தீர்ப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

தம்மையும் தமது இரு பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்ற கணவரிடமிருந்து தாபரிப்பு பணம் பெற்றுத்தருமாறு கோரி முறைப்பாடு செய்த இளம்பெண் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா பணம் செலுத்துமாறும், பிள்ளைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் பெரியவிளான் சமாதான சபை தீர்ப்பு வழங்கியுள்ளது.

கீரிமலையைச் சேர்ந்த மேற்படி இளம்பெண் பத்துவருட காலம் வரை ஒன்ருக குடும்பம் நடாத்திய தமது கணவர் தம்மைப்பிரிந்து சென்று வேறு திருமணம் செய்துள்ளார் என்றும், தமது இரு பிள்ளைகளையும் வளர்க்கமுடியாது தாம் மிகவும் கஷ்டப்படுவதனுல் தமது கணவரிடமிருந்து தமக்கும், பிள்ளைகளுக்கும் தாபரிப்பு பணம் பெற்றுத்தர வேண்டுமென்றும் பெரியவிளான் சமாதானசபையிடம் முறைப்பாடு செய்திருந்தார்

சமாதான சபைத் தலைவர் திரு. எஸ் கே. வேலுப்பிள்ளை தலைமையில் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சமாதான சபையின் கூட்டத்திற்கு இரு பகுதியினரும் வரவழைக்கப்பட்டுநீண்ட நேரம் விசாரிக்கப்பட்டனர்.

விசாரணை முடிவில் கணவர் மேற்படி இளம்பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபாவை தாபரிப்பு பணமாக செலுத்த வேண்டும் என்றும்இரு பிள்ளைகளுக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடவேண்டும் என்றும் அதன் வட்டிப்பணத்தை எடுத்து பிள்ளைகளின் செலவுகளுக்கு பயன்படுத்தவேண்டும் என்றும் சமாதான சபை தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்பை இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்டனர். இந்த விசாரணையைப் பார்ப்பதற்காக பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர். [வா]

## சிறந்த விளையாட்டு வீரராக தெரிவு



புங்குடுதீவு வெள்ளி

புங்குடுதீவு விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் அமரர் எம் எஸ். நல்லதம்பியின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான தீவுப் பகுதிகளுக்கிடையில் நடைபெற்ற 19 விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் விளையாட்டதிகாரி திரு.கு பீலிக்ஸ் தலைமையில் நடைபெறறது. இவ்விளையாட்டில் நூற்றுக்கும் அதிகமான வீரர்கள் பங்குகொண்டனர் சிறந்த விளையாட்டு வீரராக புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக்கழக வீரர் பிரான்ஸ்சிஸ் சத்தியசீலன் (ராஜ ஜி) என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

திரு சத்தியசீலனுக்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டு விளையாட்டதிகாரி திரு. கு பீலிக்ஸ்அவர்களினுல்கௌரவிக்கப்பட்டார்

இவ் இளைஞன் துடிப்புமிக்கவர். எந்த விடயத்திலும் சளைக்காதவர் ஒரு சமூக சேவையாளனும் கூட

பாடசாலைகளில் நடைபெறுகின்ற விளையாட்டுக்களில் முன்னின்று தன்னுல் ஆன பங்கினை அளித்து வக்கும் தனது பாடசாலைக்கும் பெயர் எடுத்துக் கொடுத்த வீரர்கள் வரிசையில் திரு. பிரான்சீஸ் சத்தியசீலன் ஒருவராவார்


## விவசாய டிப்ளமோ [Dip. in Agric]

(ஒரு வருடகால விவசாய டிப்ளமோ)

**போதிக்கப்படும் பாடங்கள்:**

மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை பொறியியல் [ஆண்கள்] மனைப் பொருளியல் [பெண்கள்], பண்ணை முகாமைத்துவம்.

**தகைமை;**

க.பொ.த. [சாதாரணம்] அல்லது தே.க.பொ.த, பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 1-10-86 இல் 17—24 வயதுக்கும் இடைபபட்டிருகக வேண்டும்.

விருப்பமுள்ள இருபாலாரும் 1-10.86க்கு முன்

அதிபர்,

**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்**

மருதனுமடம், சுன்னுகம்,

என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கலாம். [C4456]


## "எமது விவசாயிகள் சிறுதானிய உற்பத்தியிலும் ஈடுபடவேண்டும்"

உதவி விவசாய பணிப்பாளர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

"இன்றைய கால கட்டத்தில் விவசாயிகளின் சுய முயற்சியே எமது பிரதெசத்தின் உணவு உற்பத்தியை பெருக்கவலலது வெங்காயம், மிளகாய் போன்ற வியாபாரப் பயிர்களில் மாத்திரம் எமது விவசாயிகள் அக்கறை செலுத்தாது சிறு தானிய உற்பத்தியிலும் ஈடுபட்டு மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முன்வர வேண்டும்"

இவ்வாறு சங்கானை-தொட்டிலடியில் நடைபெறற வயல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு ச கிருஷ்ண பிள்ளை குறிப்பிட்டார்.

முன்னேடி விவசாயியான க. வீரசிங்கம் என்பவரது கமத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு தொல்புரம கமநலச் சேவை நிலைய போதனுசிரியர் ச தம்பிராசா தலைமை தாங்கினுர்

தொடர்ந்து உரையாற்றிய அவர் இன்றைய சூழ் நிலை காரணமாக விவசாயத திணைக்களம் நல்ல இன விதைகளை தென்னிலங்கையிலிருந்து பெற்றுத்தரக்கூடிய நிலையில் இல்லை என்றும் விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நல்லின விதைகளை ஏனைய விவசாயிகளுக்கு கொடுத்து உதவ வேண்டும் என்றும் கூறினுர். ஓய்வு பெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ் சதாசிவம்பிள்ளை, சங்கானை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜி. சிதம்பரநாதன், விவசாயப் போதனுசிரியர் திரு க. குமாரவேலு விவசாய திணைக்கள பயிர்ப் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. எஸ் கதிரமலை ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினுர்கள். [இ]

## நாட்டுப்பாடலில் முதலிடம்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ் கல்வித் திணைக்களத்தினரால் வட்டார ரீதியில் நடாத்தப்பெற்ற சங்கீத, நடன நாடகப் போட்டியில் யாழ் சிவப்பிரகாச மகா வித்தியாலயம் நாட்டுப்பாடல் குழு நிகழ்ச்சியில் 1ம் இடத்தையும், நாட்டுப்பாடல் தனி நிகழ்ச்சியில் 1ம் இடத்தையும், நடனப் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுள்ளது

நாட்டுப்பாடல் தனி நிகழ்ச்சியில் செல்வன் த. சுந்தரேசனும், நடனத்தில் செல்வி நா. சசிகலாவும் பரிசு பெற்றனர். [ச]


## எமது புதிய வெளியீடுகள்

1. விசு ★ லட்சுமி ★ திலீப்
   சம்சாரம் அது மின்சாரம் [Pyramid Master]
2. மோகன் ★ ரேவதி ★ கார்த்திக்
   மௌன ராகம் [V. G. P. Master]
3. சிவகுமார் ★ நதியா
   உனக்காகவே வாழ்கிறேன் [V G P. Master]
4. ரவிச்சந்திரன் ★ ஜெயலலிதா
   மூன்றெழுத்து [Pyramid Master]
5. எம ஜி. ஆர். ★ பத்மினி
   மன்னதி மன்னன் [Pyramid Master]
6. எம். ஜி ஆர். ★ லட்சுமி
   சங்கே முழங்கு [Pyramid Master]
7. ரவிச்சந்திரன ★ கல்பனு
   மெட்ராஸ் டு பாண்டிச்சேரி [Pyramid Master]

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665 [C-4491]



## நியூ விக்ரேஸ்

புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. பாரு பாரு பட்டணம் பாரு (தரமானபிரதி)
   மோகன், ரஞ்சனி
2. அரசியல் சதுரங்கம் (தரமான பிரதி)
3. குளிர்கால மேகங்கள் (தரமான பிரதி
4. சம்சாரம் அது மின்சாரம் (மாஸ்டர்)
5. ஊமை விழிகள் (மாஸ்டர்)
6. மூன்றெழுத்து (மாஸ்டர்)

**நியூ விக்ரேஸ்**

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி: 23532

(A 1313)

## விமானக்கடத்தல்காரர்களை முறியடித்த

# பாகிஸ்தான் அதிரடிப்படை செயலுக்கு

# வரவேற்பும் கண்டனமும்

## கடத்தல்காரர்கள் மீது யூ. எஸ். பிடிவிருந்து

கராச்சி, செப் 7

**கராச்சி விமான நிலையத்தில் வைத்து நான்கு ஆயுதம் தாங்கிய கடத்தல்காரரினுல் கைப்பற்றப்பட்ட அமெரிக்க 'ஜம்போ ஜெட்' விமானத்தில் இருந்த பிரயாணிகளைக் காப்பாற்றுவதற்காக பாகிஸ்தானிய கொமாண்டோக்கள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலை சில நாடுகளின் தலைவர்கள் பாராட்டியுள்ளார்கள். சில நாடுகளின் தலைவர்கள் கண்டித்துள்ளார்கள்.**

இது தவருன ஒரு அதிரடித் தாக்குதல் என்றும் அனுவசியமாக அப்பாவிப் பொதுமக்கள் இதில் கொல்லப்பட்டிருப்பதாகவும் இதனைக் கண்டித்த நாடுகள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகள் அறிக்கையொன்றின் மூலம் விளக்கியுள்ளார்கள்.

இச் சம்பவத்தின்போது பதினுறு பிரயாணிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாயுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் விமானப் பிரயாணிகளைக் காப்பாற்றுவதற்

உலகச் செய்திகள்

காக மேற்கொண்ட இந்த முயற்சி முன்னரே திட்டமிடப்பட்ட ஒன்றல்லவென்றும் கடத்தல்காரர் பிரயாணிகளை சுட்டுக்கொல்ல ஆரம்பித்த பின்னரே கொமாண்டோ வீரர்கள் விமானத்துக்குள் நுழைந்தனரென்றும் பாகிஸ்தானிய சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் குர்ஷித் அன்வர் மிஷ்ரு தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனுப் மிஷ்ரு கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாங்கள் முன்கூட்டியே திட்டமிட்டபடி அந்த விமானத்தின் மின்னியக்க இயந்திரம் எரிபொருள்முடிந்து செயழிழந்தபோது மாகாண ஆளுநரின் கட்டளைப்படி இந்த அதிரடித்தாக்குதல் மேற்கொண்டதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

விமானத்தைக் கடத்திய நான்குபேரும் அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் உயிருடன் பிடிபட்டனர் என பி.ரி.ஐ. தெரிவித்துள்ளது.

இது முன்னர் கராச்சியில் தெரிவிக்கப்பட்ட அரசபூர்வ செய்திக்கு முரணுக உள்ளது.

பிடிபட்ட நாலவரில் ஒருவர் லேசான காயங்களுக்குள்ளாகியுள்ளார் என்று தெரியவருகிறது.

இதனிடையே கடத்தல்காரர்களுக்கு அமெரிக்கா பிடிவிருந்து பிறப்பித்துள்ளது.

இவேதேளை இந்த விமானக்கடத்தலை சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்துள்ளது. பயங்கரவாதச் செயலை ஒழிப்பதற்கு எல்லா அரசுகளும் ஒத்துழைக்க வேண்டுமென அது கேட்டுக்கொண்டது. (ஓ)

## "கம்பூச்சிய பிரச்னையை தீர்த்துவைத்தால் சோவியத்துடன் மாநாடு நடத்த தயார்"

### சீனத் தலைவர் அறிவிப்பு!

பீக்கிங் செப் 7

கம்பூச்சிய நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு சோவியத்யூனியன் உதவி செய்யுமேயானுல் தாம் சோவியத்தலைவர் மிகைல் கொர்பசேவ்வுடன் உச்சி மாநாடு ஒன்றை நடத்த விரும்புவதாக சீனத் தலைவர் டென் ஷியாவோஷிஸ் அறிவித்துள்ளார்.

இந்த உச்சி மாநாட்டை நடத்துவதற்காக தாம் சோவியத் யூனியனில் எந்த ஒரு நகரத்திற்குச் செல்வதற்கும் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ள சீனத்தலைவர் இந்த முயற்சி சீன சோவியத்உறவை மேலும் பலப்படுத்த உதவும் என்றும் தெரிவித்தார். (ஓ)

## தென்னுபிரிக்காவுக்கு எதிராக

# ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தடை?

லண்டன் செப் 7

பன்னிரண்டு அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் தென்னுபிரிக்காவிற்கு எதிராக விரைவில் தாங்கள் கூட்டாக பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவது பற்றி தீர்மானித்துள்ளார்கள்

இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் நடைபெறும் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திலேயே இத்தகைய பொருளாதாரத்தடைகள் எடுக்கப்படத்தக்கன என்ற தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டுமென்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்னுபிரிக்காவிலிருந்து நிலக்கரி, இரும்பு, உருக்கு, தங்க நாணயங்கள் என்பனவற்றின் இறக்குமதி தடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னுபிரிக்காவில் மேலும் முதலீடுகள் செய்வது தடை செய்யப்படும் என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (ஓ)

## விண்வெளி பாதுகாப்பு

# சோவியத் நிலைப்பாடு

மாஸ்கோ செப் 7

அமெரிக்காவின் பாதுகாப்பு சேந்திரநிலையத்திற்கு எதிராக தாங்கல்விண்வெளிப்பாதுகாப்பமைப்பொன்றை ஏற்படுத்தப்போவதில்லை என்று சோவியத் யூனியன் அறிவித்துள்ளது. (ஓ)

## மக்கள் மனதில் அழியா இடம்பெற்றவர்



பிறப்பும் இறப்பும் இயற்கையான சுழற்சிகள். இந்த நீர்க்குமிழி மனிதவாழ்வில் நல்லதைச் செய்து நல்லவற்றைச் சிந்தித்து வாழ்பவர்கள் மிக மிக அரிது எனலாம்.

இக்காலத்தில் இளமையில் குற்றமின்றி வாழ்பவர்களைக் காண்பது அரிதிலும் அரிது. இந்த இடத்தில் நின்று பார்க்குமிடத்து மண்டைதீவு திரு. புண்ணியத்தின் இழப்பு எதிர்கால நல்ல சமுதாயத்திற்குப் பேரிழப்பாகிவிட்டது.

மண்டைதீவு திரு. வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் இவரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. இவர்திடீரென மறைந்து நூறு நாட்கள் ஆகின்றன.

தினமும் வானத்தில் பறந்து திரியும் ஹெலிகொப்டர்கள் இரைச்சல்கள் இக்கிராமமக்கள் மனதில் புண்ணியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. இப்பகுதியில் 'ஹெலித்' தாக்குதலுக்கு இலக்காகிய முதல் இளைஞன் புண்ணியம். இதனுல் இப்பகுதி மக்களால் மறக்கமுடியாத அழியா இடத்தைப் பெற்றுள்ளது இவரது இழப்பு.

புண்ணியம் ஒரு சாதாரண இளைஞனல்ல. எல்லோர்க்கும் நல்லவன், புனிதமான சேவை உள்ளம் படைத்தவன். தன் கடமையே இலட்சியமாகக் கொண்டு கண்ணியமாக வாழ்ந்த இளைஞன்.

அரசியல் மிடுக்கேறியிருந்த காலங்களிலும், பொதுவாழ்விலும், சமூக சமயப்பணிகளிலும், பொதுத் தொண்டுகளிலும் நீதியான கருத்துக்களோடும், செயற்பாடுகளோடும் பண்பாக வாழ்ந்து இளம் சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக, வழிகாட்டியாக செயற்பட்டு வந்தவர் இவர் தீவகம் முதல் வன்னியீருக வுள்ள இளம் சமுதாயம் இவரது இனிய பண்புகளைச், சீரிய குண இயல்புகளை நினைக்காமல் இருக்கமுடியாது. எந்த நேரத்திலும் எவர்க்கும் உதவும் இவரது பண்பு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாதவை.

ஊருக்கும், நண்பர்க்கும் இனியவனுய் உயர்ந்துவாழ்ந்தவர் மற்றவர்க்கு உதவும் பணியிலே சளைக்காது இறுதி நேரத்திலும் சேவையே தன் இலட்சியமாகக் கொண்டு மடிந்தது எம்மை எல்லாம் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. காயமுற்றவர்க்கு உத

(7ம் பக்கம் பார்க்க)


பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

GROUP ATLANTIC
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)



பிரயாண ஒழுங்கு

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி எதிர்வரும் 15ம் திகதி இங்கிருந்து அழைத்துச் செல்ல உள்ளார்.

உங்கள் கடவுச் சீட்டுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகியவற்றிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

"லிப்ருஸ் றவல்ஸ்"
ஆர். வி. ஜி. கட்டிடம்
70, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(A 1315)



பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்
INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய்.
(A-1029)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை**

தோற்றம்: 31-07-1921
மறைவு: 31-08-1984
திதி: 08-09-1986

அன்புத் தெய்வமே! நீர் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உமது நினைவுகள் எங்கள் மனதை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நந்தாவில், கொக்குவில்.
(C 4476)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கந்தையா முருகேசு**

அன்னை மடியில்: 22-09-1917
இறைவன் அடியில்: 10-08-1986

எம்மைவிட்டு அமரராகிய அன்பின் திருவுருவே. எம் குடும்பத்தின் மணி விளக்காய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னல்போல் இறைவன் திருவடி சேர்ந்தீரே. உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி எம் குடும்பத்தினர் யாவரும் இறையடி இறைஞ்சுகின்றோம். 09-09-1986 (நாளை) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் பங்கு பற்றுமாறும், உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.
(A 1248)

### இலங்கை அரசின் புதியநகல்

# அறிக்கையின் முழுவிபரம் இன்னும் கூட்டணிக்கு கிடைக்கவில்லை

சென்னை செப்7

"இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே விரிவான உடன்பாடு ஒன்று ஏற்பட வேண்டுமானால் பல விஷயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியிருக்கிறது" என த.வி கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இலங்கை அரசின் திருத்தப்பட்ட நகல் யோசனைகளில் ஒரு பகுதிதான் சென்னையிலுள்ள தங்களுக்குக் கிடைத்திருக்கின்றன என்றும் ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை இணைப்பது நிலசம்பந்தப்பட்ட கொள்கையுட்பட முக்கிய பிரச்னைகள் குறித்து இலங்கையரசின் பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் இதனைப்பற்றிய பதில் இன்னும் ஓரிரு நாட்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைக்குமென்று தாம் நம்புவதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இணக்கமான திருத்தப்பட்ட நகல் மசோதா இல்லாததால் நேற்றுச் சென்னையில் கூடிய த. வி கூட்டணி 'பொலிட் பீரோ' கூட்டம் வரும் புதன்கிழமைக்கு ஒத்திப்போடப்பட்டது.

இலங்கை அரசுக்கும் இந்த முன்னணிக்குமிடையிலான கருத்துவேறுபாடுகள் சில அம்சங்களில் ஓரளவு குறைக்கப்பட்டிருந்தும கூட பல அம்சங்கள் குறித்து தெளிவாக்கப்படவேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விரு தரப்பினருக்குமிடையே கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து த வி கூட்டணி 'பொலிட் பீரோ' கூட்டம் வரும் புதன்கிழமை நடைபெற்ற பின்னர் இலங்கைத் தமிழ்போராளிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் அமிர்தலிங்கம் கூறினார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தாயகம் திரும்பிய பின்னர் த வி. கூட்டணி அவரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தும் என்றும் அவர் கூறினார். (ஒ)

## அடைக்கலமாதா வருடாந்த திருநாள்

பரிசுத்த கன்னிமரியாளின் அமல உற்பதினமான இன்று யாழ் அடைக்கலமாதா ஆலய வருடாந்த திருநாளும் கொண்டாடப்படுகிறது யாழ் மேற்றிராசன ஆசனக்கோயிலாக இது முன்பு இருந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

1783-1802ம் ஆண்டுகளில் பழைய கோயில் தற்போதைய வியாகுல மாதா கெயில் இருந்தது. 1907ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ம் திகதி அன்றைய யாழ் ஆயர் யூலன் ஆண்டகை தற்போதைய ஆலயத்துக்கான அத்திபாரக்கல்லை நாட்டினார். அன்று வண பிதா அலோசியஸ் அடிகள் இதன் கட்டட வேலைகளை ஆரம்பித்தார். இடையிடையே தடைப்பட்டு வந்து பின்னர் வண. பிதா எச் பெருஸல் அடிகள் பங்குத் தந்தையாக வந்ததும் இது கட்டி முடிக்கப்பட்டு 1928 ஜூன் 26ம் திகதி வழிபாட்டுக்கு திறக்கப்பட்டது.

1928 செப்டம்பர் 8ம் திகதி மாதாவின் திருநாளன்று அன்றைய யாழ். ஆயர் ஜே ஏ. கியோமோர் ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டது. 1978ல் இன்றைய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஆட்சியில் ஐம்பதாவது ஆண்டகையின் ஆண்டையும் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

1984 யாழ். நகரில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது சிலரின் தாக்குதலுக்குள்ளாகி இதன் ஒரு பகுதி சேதமடைந்தது இதனை அழிக்கலாம் என எண்ணினார்கள். ஆனால் மாதாவின் புதுமையால் இன்று இது கம்பீரமாக யாழ் நகரில் காட்சியளிப்பது மட்டுமன்றி தமிழர்களின் சரித்திரத்திலும் ஒரு இடம் பெற்றுவிட்டது.

— ம. வரதன்

# புதிய நிர்வாகிகள்

### இந்துமன்றம்

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி இந்து மன்றத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. சி. இராசமாணிக்கம், தலைவர் திரு க. பூதத்தம்பி, செயலாளர் திரு. ப மகேந்திரதாசன், பொருளாளர் திரு. பொ.சக்திவேல், நிருவாக சபை உறுப்பினர்கள் திரு க.செல்வராசா, திரு.சி. வசந்தகுமார். [இ]

★

### சமாதான சபை

வசாவிளான், ஞாயிறு

கிராம மக்களிடையே ஏற்படும் பிணக்குகளை கிராம மட்டத்திலேயே தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் குப்பிளானில் சமாதான சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

திரு நா. செல்வநாயகத்தை தலைவராகவும் திரு அ இராசதுரையை செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மேற்படி சபையில் மேலும் 19 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். [இ]

★

### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நைக்கிள மேசன் சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ஆ இம்மனுவேல், செயலாளர் இ கி செல்வநாயகம், பொருளாளர் அ. பர்ணாந்து. உப தலைவர் பா. அகிலன். ஒன்பது பேர் அடங்கிய மற்றும் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (வா)

★

### சன சமூக நிலைய சமாஜம

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சண்டிலிப்பாய் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ம சரவணபவ ஐயர் தலைமையில் நடைபெற்ற போது தெரிவு செய்யப்பட்ட சமாஜ நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு: தலைவர்வ. செகராசசிங்கம், (முள்ளானை கலைவாணி சன சமூக நிலையம் உப தலைவர் ஏ சி. ஜெயரத்தினம், (நவாலி தெற்கு முரசொலி சன சமூக நிலையம் செயலாளர் சி வி. பரமேஸ்வரன் மானிப்பாய் தெற்கு திருவள்ளுவர் சன சமூக நிலையம்) உப செயலாளர் அ புவனேந்திரலிங்கம் (பிரான்பற்று பால முருகன் சன சமூக நிலையம்) பொருளாளர் சி. சந்திரன். (நவாலி வளர்மதி சன சமூக நிலையம்.)

செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு. வ. நாகராசா (சிறுவிளான் ஞானோதய ச. ச. நிலையம் கு. அருளம்பலம் (ஆனைக்கோட்டை பாரதி ச. ச. நிலையம்) சு. எட்வேர்ட் (சில்லாலை தெற்கு சென் ஜேம்ஸ் ச. ச. நிலையம்) கே. சபாநாதன் (சண்டிலிப்பாய் வடக்கு ச ச. நிலையம்) ச. வல்லிபுரம் (மாதகல் விபுலானந்தர் ச. ச. நிலையம்) வ. இரத்தினதுரை (மாதகல் உதயதாரகை ச. ச. நிலையம்) தி சம்பந்தர் (சுதுமலை நாவலர் ச. ச. நிலையம்) வே. செபரத்தினம் (மாதகல் துறைமுகம் பரிமளகாந்தி ச. ச. நிலையம்.) (இ)

★

### பிரஜைகள் குழு

முல்லைத்தீவு, ஞாயிறு

பிரஜைகள் குழுக்கூட்டம் குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு சி. கனகசபை, உப தலைவர் திரு க. யோகேந்திரன், செயலாளர் திரு சி. இராஜேஸ்வரன், உப செயலாளர் திரு சி அரியரத்தினம், பொருளாளர் திரு. வே. தியாகராசா.

ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (வா)

### வர்த்தக சங்கம்

வேலணை, ஞாயிறு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தனியார் வர்த்தக சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஊர்காவற்றுறை சென் மேரிஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அங்குரார்ப் பணக் கூட்டத்தின்போது நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். போஷகர் திரு ஆ அஞ்சலோ, தலைவர் ஜெ சந்திரகாந்தன், உப தலைவர் ஆ பொன்னம்பலம், செயலாளர் அ. ஸ்ரீபன், பொருளாளர் சு. பத்மநாதன்.

ஐவர் அடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [க]

### மக்கள் மனதில்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வும் பணிக்குச் சென்றவேளை தன் உயிரையும் இழந்தது எம் எல்லோரின் உள்ளங்களையும் புண்ணாக்கிவிட்டது இவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சி. ஆ. ஏகானந்தசிவம்

## நூல்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், திங்

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம், கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒத்தாசையுடன் நூலக வாரத்தையிட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை சேகரித்துள்ளனர். இந் நூல்களை பிரதம கல்வி அதிகாரி திரு வி. தங்கராசா இன்று 8ந் திகதி திங்கட்கிழமை காலை உத்தியோக பூர்வமாக கையேற்று மேற்படி கல்லூரியின் நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்வார். இந் நிகழ்ச்சி வித்தியாலய அதிபர் திரு மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும். (ச)

# இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 23 (1986-9-86
கிழமை- திங்கள்
திதி- சதுர்த்தி காலை 9-10ன் மேல் பஞ்சமி
நக்ஷத்திரம்- சுவாதி
பி. இ வரை

மேடம்- பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். காதலர் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும் களஸ்திர வழியாலும் மகிழ்ச்சியுண்டு

இடபம்- சிரித்துப் பேசியவர்கள் இன்று சீறி விழுவார்கள். உதவிசெய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

மிதுனம்- பிதா வழியிலிருந்து பிணக்குகள் தோன்ற இடமுண்டு. புண்ணிய காரியங்களையும மனம் நாடும். நீண்டநாள் மனக்குறையும் நிவர்த்தியாகும்.

கடகம்- வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியிலும் செல்வாக்கு வளரும்

சிங்கம்- வசதிகள் பெருகும் வரவிலும் திருப்திதென்படும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயம் நல்ல முடிவைத் தரும்.

கன்னி- எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். வியாபாரத் துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். சிந்தையில் குழப்பமும் ஏற்படும்.

துலாம்- எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். உடல் நலமும் பாதிக்கப்படும்.

விருச்சிகம்- எண்ணம்போல் வாழ்வு மலரும். சமூகத்தில் மதிப்பு உயரும் நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள்

தனுசு- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிக்கும்.

மகரம்- மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு மனம் போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

கும்பம்- இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர் புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

மீனம்- வயிற்றுக் கோளாறு தோன்றககூடுய உணவுவிடயத்தில் சுகாதாரம் வேண்டும். வேவுகளைகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

திருமலை
வே. ரவீந்திரன்

87 A/L DAY CLASS
ஆரம்பம்: 10-09-86 புதன் காலை 8-30
விபரங்கட்கு:
NEW MASTER INSTITUTE
BMC LANE, JAFFNA. (A 1317)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 8-9-86

## இன்று உரக்களஞ்சிய திறப்புவிழா

(வட்டுக்கோட்டை)

அராலியில் உரக் களஞ்சியத்தை யாழ் கமநல சேவைகள் திணைக்களசிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திரு க. பரமலிங்கம் இன்று திங்களன்று திறந்துவைத்து உரையாற்றுவார்.

இவ்விழாவில் யாழ் மாவட்ட பயிர்க்காப்புறுதிப் பணிப்பாளர் திரு. சு. சிவகுரு, சங்கானை உதவிஅரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம், பெரும்பாக உத்தியோகத்தர்கள் திரு சி சூசைப்பிள்ளை, நா. குழந்தைவேல் ஆகியோரும் மற்றும் பல விவசாய அமைப்புப் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்துவார்கள்.

## கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு தனியான மாகாணசபை வேண்டும்!

### முஸ்லிம்லீக் வாலிப முன்னணி தீர்மானம்

(மட்டக்களப்பு நிருபர்)

''இனப்பிரச்னைத் தீர்வில் எவ்வாறான முடிவு எடுக்கப்பட்டாலும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு தனியான மாகாணசபை அமைக்கப்படவேண்டும்''.

அகில இலங்கை முஸ்லிம்லீக் வாலிப முன்னணியின் கிழக்கு மாகாண சம்மேளன மகாநாட்டிலேயே மேற்குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இம்மகாநாடு நடைபெற்றது.

மட்டக்களப்பு 2வது எம்.பி. ஜனாப் ரிஸ்வி சின்னலெப்பை இம்மகாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் உதவி அரச அதிபர் பிரிவுகளை ஒன்றிணைத்து தனி முஸ்லிம் மாகாணம் அமைக்கப்படவேண்டும்.

மேற்படி முஸ்லிம் மாகாணத்தில் தனிமுஸ்லிம்களின் இனவிகிதசாரப்படி காணிகள் ஒதுக்கப்படவேண்டும்.

இவ்வகையில் 3839 சதுர மைல் பரப்பை கொண்ட கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு 1267 சதுர மைல் காணி ஒதுக்கப்பட வேண்டும்''

இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தில் பாண்டிச்சேரி தனி ஒரு மாநிலமாக அமைக்கப்பட்டுள்ளது. போல் உத்தேச கிழக்கு மாகாண முஸ்லிம் மாகாண சபையும் சாத்தியமானதென்றும் அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சிங்கள மக்களிடம் தம் உரிமைக்காக போராடி சிரமப்படுவது போன்ற ஒரு நிலையை முஸ்லிம்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்களிடம் போராடிப் பெறக்கூடாது என்பதற்காகவே இத்தீர்மாமானத்தை இம் மாநாட்டில் நிறைவேற்றுவதாகவும் குறிப்பிடப்பட்டது. (மா)

## "வல்லரசுகள் ஆயுதபோட்டி அணுஆயுத அச்சுறுத்தலை ஒழிக்கவேண்டும்"

### அணிசேரா இயக்க மாநாட்டின் இறுதி அறிக்கை

ஹராரே, திங்கள்

ஆயுதப் போட்டியையும், அணுஆயுத யுத்த அச்சுறுத்தலையும், ஒழித்துக்கட்ட வல்லரசு நாடுகள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்''

இவ்வாறு ஹராரேயில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் 8-வதுஉச்சிமாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1ம் திகதி ஆரம்பித்த இம்மாநாடு நேற்றுடன் முடிவடைந்தது. மாநாட்டின் இறுதி அறிக்கையில் அணுஆயுத சோதனைகளை நிறுத்திக் கொள்வதென்ற சோவியத் அறிவிப்புக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவும் சோவியத்தைப் பின்பற்றவேண்டும் எனவேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

### பொருளாதாரத் தடைகள்

தென்னாபிரிக்கா பற்றி இவ்வறிக்கை தெரிவிக்கையில், அந்நாட்டுக்கெதிராக கட்டாயத் தடைகள் கொண்டுவர வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் அயல்நாடுகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

### அமெரிக்கா மீது கண்டனம்

மாநாட்டின் இறுதிஅறிக்கையில் லிபியா மீது அண்மையில் அமெரிக்காமேற்கொண்ட தாக்குதல் ஓர் அரச பயங்கரமாத நடவடிக்கை எனவர்ணிக்கப்பட்டுள்ள அதேவேளை நிக்கரகுவாவின் அரச எதிர்ப்புப் படைகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆதரவுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முகாபே உரை

இதேவேளை மாநாட்டின் இறுதியில் செய்தியாளரிடையே உரையாற்றிய ஸ்தாபனத்தின் புதிய தலைவர் றொபர்ட் முகாபேஇம்மாநாடு வெற்றியளித்திருப்பதாககுறிப்பிட்டார்.

89ம் ஆண்டில் நடைபெறவுள்ள அடுத்த உச்சிமாநாடு எங்கு நடத்தப்படுவது என்பதில் இணக்கம் காணப்படவில்லை.

இதுபற்றி நிக்கோசியாவில் நடைபெறவுள்ள அணிசேரா இயக்க வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்படவுள்ளது. (ஊ)

## வெளிநாட்டுப் பத்திரிகையாளர் படப்பிடிப்பில் ரயில் பயணிகள் அவலம்!

வவனியா, ஞாயிறு

வடபகுதியில் தற்பொழுது நிலவும் நிலைமைகளை நேரில் கண்டறியும் வகையில் இரு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கொழும்பிலிருந்து ரயில்மூலம் கடந்த சனிக்கிழமை வவனியா வந்தடைந்தார்கள்.

அதே ரயிலில் பிரயாணம் செய்த வடபகுதி பிரயாணிகள் முண்டியடித்த நிலையில் பஸ்களில் ஏறிய சம்பவங்களை மேற்படி பத்திரிகையாளர்கள் வீடியோ படம் எடுத்துள்ளார்கள்.

இந்த இரண்டு பத்திரிகையாளர்களும் ஆண்களென்றும் தமது வீடியோ படப்பிடிப்பை தொடர்ந்து வவனியா நிலைமைகளை கேட்டறிந்ததின் பின் யாழ்ப்பாணம்நோக்கி வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரா)

## மன்னார் செயலக ஊழியர்களை கடமைக்குத் திரும்புமாறு அரச அதிபர் வேண்டுகோள்

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நிலைமை வழமைக்குத்திரும்பியுள்ளதால் அரச செயலகத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் இன்றுகடமைக்குத் திரும்புமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 3ம் திகதி இடம்பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டமக்கள் எருக்கலம்பிட்டி, தாராபுரம்: கரிதல், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்திருந்தனர். இவர்கள் நேற்று முனதினம் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிவிட்டனர் என்றும் இவர்களுக்குத் தேவையான உணவுவகைகள் வழங்கப்பட்டன என்றும்அரச அதிபர் தெரிவித்தார்

தொலைபேசி வசதிகள்சீரமைக்கப்பட்டுள்ளதுடன், மின்சார வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும் இன்று பூரணமாக அவ்வேலைகள்முடிவடைந்து விடுமென்றும் அவர் சென்னார்.

பஸ்போக்குவரத்துச் சேவை இன்று நடைபெற தாம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் அவர்தெரிவித்தார் (மா)

## உணவுமுத்திரை விநியோகம்

இறுப்பிட்டி, ஞாயிறு

புங்குடுதீவு மக்களுக்கான உணவு முத்திரைகள் கடந்த வாரம் தொடக்கம் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் மூலமாக வழங்கப்பட்டுவருகிறது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளின் மூலம் பதிவு செய்யப்பட்டவர்களுக்கும், குழந்தைகளுக்கு அவர்களின் பிறப்பு அத்தாட்சி பத்திரம் செலுத்தும் பட்சத்தில் அவர்களுக்கும் அம்முத்திரை வழங்கப்படுகின்றது. சில கிளைகளில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கான முத்திரைகள் அக்கிளையை உள்ளடக்கிய கிராம சேவை அலுவலர்களுக்குக் கிடைக்காதமையால் அப்பகுதி மக்கள் பெருபசிரமத்திற்காளாக வேண்டியுள்ளது. [வா]

## பீரிஸ் குடும்பத்துக்கு சேவாச்சிரமம்நிதிஉதவி

கொழும்புத்துறை, ஞாயிறு

யாழ் பஸ்நிலையத்துக்கு அண்மையில் கடந்த மாதம் 24-ம் திகதி 'ஷெல்' விழுந்து வெடித்ததினால் பலியான பிரபல பத்திரிகை விற்பனையாளர் திரு. பீரிஸ் குடும்பத்தினருக்குப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஆயிரம் ரூபாவை நிவாரணப் பணமாக வழங்குவதென்று தீர்மானித்துள்ளது. [சி]

## மரண அறிவித்தல்

### ந. சண்முகராசா

[வைத்திய கலாநிதி]

கொக்குவில் மேற்கு நடராசா வீதியைச் சேர்ந்த ஞானபண்டித வைத்தியசாலை, வைத்திய கலாநிதி ந. சண்முகராசா காலமானார். இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும், இராசலட்சுமி, சகுந்தலாதேவி, தவராசலிங்கம் ஆகியோரின் தகப்பனாரும். காலஞ்சென்ற வைத்தியர் இராமச்சந்திரன் மார்க்கண்டு. இராசநாயகம், அட்டலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணரட்ணத்தின் மாமனாரும், விவேகானந்தராசா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா, நிருபா, மோகனதாஸ் ஆகியோரின் பேரனுமாவார் ஈமைக்கிரியைகள் திங்கட்கிழமை [08 - 09 - 86] மாலை 3 - 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானதத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: திரு. அ. விவேகானந்தராசா

(C-4493)

### கயிலாயபிள்ளை செல்லையா

[இளைப்பாறிய கூட்டுறவு தலைமைப்பரிசோதகர்]

கயிலாயபிள்ளை செல்லையா காலமானார். அன்னார் திருமதி சத்தியதேவியின் அன்புக் கணவரும், சத்தியரூபன் [கனடா] செல்வரூபன் [கனடா] உர்ஷலா தேவி, கயிலாயரூபன் [கனடா] உமாரூபினி, வித்தியாரூபினி, கனகரூபினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிறீவாமதேவன் [நைஜீரியா] கமலாதேவி, கிருஷ்ணதேவி [U K] ஆகியோரின் மைத்துனரும், செல்வராஜா, ஆனந்தகிருஷ்ணன் [U.K] கௌரிதேவி [நைஜீரியா] ஆகியோரின் சகலரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை [8-9-1986] பி.ப.2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைமன் வீதி,
யாழ்ப்பாணம். [C 4496]

## மாகாணசபைத்திட்டம்: குருநாகலில் பௌத்த சம்மேளனம் மாநாடு

குருநாகல் ஞாயிறு

உத்தேச மாகாண சபைத் திட்டம் பற்றி தெளிவுபடுத்தும் மாநாடொன்று இன்று குருநாகலில் நடைபெறும் இம்மகாநாட்டிற்கு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா தலைமை வகிப்பார்.

அகில இலங்கை சிங்கள பௌத்த சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பௌத்த தலைவர்களின் இம் மாநாடு குருநாகல் நகரசபை மண்டபத்தில் இடம்பெறும்.

உத்தேச மாகாண சபைகுறித்து பௌத்த சம்மேளனம் மாவட்ட ரீதியில் நடத்தும் நான்காவது மாநாடு இதுவாகும். இம் மாநாட்டிற்கு குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பதினான்கு தொகுதிகளிலிருந்தும் சுமார் 2500 பிக்குகள் கலந்துகொள்வார்களென கூறப்பட்டது. [ரா]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.